Registered as a NewsPaper

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள் – IV

நாதம் 15 | திருவள்ளுவர் ஆண்டு 2035 | சித்திரை – 18 | 30–04–2004. | வெள்ளிக்கிழமை | ஓசை –072

S.M கோல்ட் ஹவுஸ்

காலத்தால் அழியாத
கண்கவர் தங்க
நகைகளை சுத்தமான
22 கரட் தங்கத்தில்
தெரிவு செய்து
பெற்றுக்கொள்ள



S.M கோல்ட் ஹவுஸ்

இல:-46A, தர்மலிங்கம் வீதி,
வவுனியா.
T.P: 024-222 4247
(சி-9294) 077-6059672

# அரசின் எதிர்கால செயற்பாட்டைப் பொறுத்தே எங்களின் அடுத்தகட்ட நடவடிக்கை இருக்கும்!

## பேச்சுவார்த்தை குறித்து தற்பொழுது கூறுவது பொருத்தமற்றது என்கிறார் சு.ப.தமிழ்ச்செல்வன்

(கிளிநொச்சி)

**"புதிய அரசாங்கம் மக்கள் வழங்கிய ஆணையின் அடிப்படையில் எப்படி இனிச் செயற்படப் போகின்றது என்ற அடிப்படையை வைத்துக்கொண்டுதான் நாம் எமது நிலைப்பாடுகளை எடுப்பது பொருத்தமானதாக இருக்கும். பேச்சுவார்த்தை பற்றி தற்பொழுது கருத்துக் கூறுவது பொருத்தமற்றது" என அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்கள் தெரிவித்தார்.**

நேற்று பிற்பகலில் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர் மேஜர் ஜெனரல் டொன் புறூவ்கொவ்டேயுடனான சந்திப்பின் பின் பத்திரிகையாளரிடம் பேசிய போது சு.ப. தமிழ்ச்செல்வன் அவர்கள் இவ்வாறு தெரிவித்தார். இச்சந்திப்பின் பின் பத்திரிகையாளருக்கு வழங்கிய பேட்டியின் விபரம் வருமாறு.

கேள்வி:- பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பது பற்றி சந்திரிகா கூறியிருக்கிறார். எந்த அடிப்படையில் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கு விடுதலைப் புலிகள் தயாராக இருக்கிறார்கள்?

பதில்:-இது பற்றிய கருத்துக்களை நான் இப்போது சொல்வது பொருத்தமற்றது. ஏனெனில் நோர்வேயினுடைய தூதுக்குழு எம்மைச் சந்திக்க இருக்கிறார்கள். அரச தரப்பினுடைய உண்மையான நிலைப்பாடுகளை அவர்கள் அறிந்து வந்து எங்களுடன் பேசிய பின்பே நாம் எமது தலைமைப்பீடத்தின் நிலைப் பாடுகளைத் தெளிவாக முன்வைப்போம்.

கேள்வி:- பேச்சுவார்த்தை ஆரம்பிப்பது பற்றி சந்திரிகா அரசு உங்களுக்கு நேரடியாகத் தெரியப்படுத்தியிருக்கிறதா?

பதில்:- இதுவரை உத்தியோக பூர்வமாகத் தெரியப்படுத்தப்படவில்லை. இன்னும்

(iv பக்கம் பார்க்க)



## சமாதான நடவடிக்கையில் இந்தியாவின் நேரடிப்பங்களிப்பு இருக்க வேண்டும்

### ஐ.ம.சு.மு விரும்புவதாக கதிர்காமர்

(கொழும்பு)

சிறிலங்காவின் சமாதான நடவடிக்கையில் இந்தியாவின்மேலதிக நேரடிப்பங்களிப்பு இடம்பெற வேண்டுமென ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் விரும்புவதாக சிறிலங்காவின் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் தெரிவித்துள்ளார்.

அண்மையில் குறுகிய கால விஜயம் ஒன்றை மேற்கொண்டு

(iv பக்கம் பார்க்க)

## பல்வேறு முக்கிய விடயங்கள் சந்திப்பின்போது பேசப்பட்டன!

### யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழுத் தலைவர் டொன்புறூவ்கொவ்டே

(அலுவலக செய்தியாளர்)

இன்றைய சந்திப்பில் மிகவும் முக்கிய விடயங்கள் கலந்துரையாடப்பட்டதாக இலங்கை யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுத்தலைவர் டொன் புறூவ்கொவ்டே தெரிவித்துள்ளார்.

நேற்றுக் காலை தமிழீழ அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்களை கிளிநொச்சி சமாதான செயலகத்தில் சந்தித்து உரையாடிய பின்னர் பத்திரிகையாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; கண்காணிப்புக்குழுவின் எதிர்கால செயற்பாடுகள் குறித்தும், தற்போதைய அரசியல் சூழல் பற்றியும், இனிவரும் காலங்களில் இரண்டு தரப்பும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை எவ்வாறு தொடர்ந்து கடைப்பிடிப்பது என்பது தொடர்பாகவும், உலக ஒத்துழைப்பை எவ்வாறு தொடர்ந்தும் பெற்றுக்கொள்வது என்பது பற்றியும் ஆராயப்பட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப்புலிகள் இந்த விடயங்களில் சாதகமான நம்பிக்கையான சமிக்ஞைகளைக் காட்டியுள்ளனர். எதிர்கால சமாதான நடவடிக்கைகள் குறித்து இந்தப் பேச்சுவார்த்தை ஆக்கபூர்வமானதாகவும் நம்பிக்கை உடையதாகவும் அமைந்துள்ளது என்றார். (லோ.கு)

## கண்காணிப்புக் குழுவின் யாழ்.அலுவலகத்தில் புலிகள்–படையினர் சந்தித்துப் பேச்சு

### அடாவடித்தனங்களை நிறுத்த புலிகள் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் படைத்தரப்பிற்குமிடையிலான முக்கிய சந்திப்பு ஒன்று நேற்று யாழ்ப்பாணத்தில் இடம் பெற்றுள்ளது.

இலங்கைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் யாழ். அலுவலக தலைமை அதிகாரி கிறிஸ்ரின் தலைமையில் அவரது அலுவலகத் தில் இடம்பெற்ற இச் சந்திப்பில் யாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி, மற்றும் நல்லூர் கோட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் பொ. ஈஸ்வரன்,வடமராட்சி அரசியல்துறைப் பொறுப்பாளர் தயா ஆகியோரும்; படைத்தரப்பில் யாழ். மாவட்ட கட்டளைத் தளபதி சுசில் சந்திரபால,மற்றும் கேணல் ரட்ணநாயக்க ஆகியோர் மற்றும் யாழ். மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் ஆனந்த சேனவிரட்ண ஆகியோர் தலைமையிலான குழுவினரும் கலந்துகொண்டனர்.

இதன்போது நடைபெற்று முடிந்த நாடாளுமன்றப் பொதுத் தேர்தலின் பின் யாழ் குடா நாட்டில் நிலவி வரும்அரசியல் இராணுவ மற்றும் மக்களின் இயல்பு வாழ்வு நெருக்கடி நிலைமைகள் தொடர்பாக

(iv பக்கம் பார்க்க)

## மட்டு.படுகொலைகள் போன்றவை யுத்தநிறுத்தத்தில் பாரிய நெருக்கடிகளை ஏற்படுத்தக் கூடியவை!

### டொன்புறூவ்கொவ்டேயிடம் புலிகள் எச்சரிக்கை

(அலுவலகசெய்தியாளர்)

மட்டு.படுகொலைச் சம்பவங்கள் போன்றவை யுத்தநிறுத்த உடன்பாட்டைச் செம்மையாக நடைமுறைப்படுத்துவதா அல்லது இந்த அமைதிச் சூழலைத் தொடர்ந்து பேணுவதில் பாரிய குழப்பத்தையும், நெருக்கடிகளையும் நிச்சயமாக ஏற்படுத்தும் என்ற எமது தலைமைப்பீடத்தின் நிலைப்பாட்டை யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழு ஊடாக அரசிற்கு தெரியப்படுத்துமாறு யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழுத்தலைவரிடம் கோரியுள்ளோம் என அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் நேற்றுத் தெரிவித்தார்.

அவர் ஊடகவியலாளருக்கு வழங்கிய பேட்டியில் சில கேள்விகளுக்கான பதில்கள் கீழே தரப்படுகின்றன.

கேள்வி:- இன்றைய சந்திப்பில் முக்கியமாக எந்தவிடயங்கள் தொடர்பாக பேசப்பட்டது?

பதில்:- இன்று நாம் யுத்தநிறுத்த கண்காணிப்புக்குழுத் தலைவருடன் பேச்சு நடத்தியிருக்கிறோம். இதில்

(iv பக்கம் பார்க்க)

# போரினால் பாதிக்கப்பட்ட பிரதேச புனர்வாழ்வுத்திட்டம்

# (CAARP)

**ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதிப்படுத்தப்பட்டது**

**கடன் இலக்கம்-2043 SRI(SF)**

## முல்லைத்தீவு மாவட்டத்தில் சமூக மீளமைப்பு உப திட்டத்தை அமுல்படுத்துவதற்கு பங்குதாரராவதற்கான அரசசார்பற்ற நிறுவனங்களின் (என்.ஜீ.ஓ) விருப்ப வெளிப்பாடு பற்றிய அழைப்பு

போரினால் பாதிக்கப்பட்ட பிரதேச புனர்வாழ்வுத் திட்டத்தின் ஆகுசெலவு சார்பாக பலதரப்பட்ட நாணயங்களில் ஆசிய அபிவிருத்தி வங்கியிலிருந்து கடனொன்றை இலங்கை அரசாங்கம் பெற்றுள்ளது. வடகிழக்கின் போரினால் மோசமாகப் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் பிரதானமாக யாழ்ப்பாணம்,மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு , வவுனியா,திருகோணமலை,மட்டக்களப்பு மற்றும்அம்பாறை மாவட்ட மக்களின் வாழ்க்கைத் தரத்தை மீளமைப்பதற்கும் அத்தியாவசிய உட்கட்டமைப்பு வேலைகளுக்கு உதவிகளை நல்குவதுமே இத்திட்டத்தின் பிரதான நோக்கமாகும்.இத்திட்டம் வடகிழக்கு மாகாணத்திலுள்ள எட்டு மாவட்டங்களில் செயற்படுவதோடு விடுவிக்கப்பட்ட, விடுவிக்கப்படாத பகுதிகளையும் உள்ளடக்கியதாகும்.

இத்திட்டம்அரசாங்கத்திணைக்களங்களின் உதவியுடன்(அரச திணைக்களங்கள், திட்ட வெளிக்கள உத்தியோகத்தர்கள்,அரச சார்பற்ற நிறுவனங்கள்) உள்ளூர் சமுதாய அமைப்புக்களாலும், உள்ளூர் சமூகங்களினாலும் அமுல்படுத்தப்படும் இந்த சமூக அபிவிருத்தி உபதிட்டங்கள் சமூகத்தை மையமாகக் கொண்ட சமூகத்தவர்களின் பூரண பங்களிப்போடு செயற்படுத்தப்படும். இத்திட்டத்தில் பயன்பெறும் சமூகத்தினர் இத்திட்டத்தை திட்டமிடுவதிலும் ,அமுல் நடத்துவதிலும் இத்திட்டத்தின் அன்றாட அபிவிருத்தி வேலைகளை கண்காணிப்பதிலும் முற்றாகப் பங்களிப்புச் செய்வதை உறுதிப்படுத்த வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

பின்வரும் கிராமங்களில் இனங்காணப்பட்ட சமூகத்தினரிடையே சமூக அபிவித்தித் திட்டங்களைச்செயற்படுத்துவதற்கும், சமூகத்தை அபிவிருத்திக்குத் தயார் படுத்துவதற்கும்,வளங்களை ஒன்றுபடுத்துவதற்கும் ,நிறுவன ரீதியான அபிவிருத்தியை உருவாக்குவதற்கும் ஏற்கனவே வடக்கு -கிழக்கில் திட்டங்களை செயற்படுத்தும் தகுதி வாய்ந்த அரச சார்பற்ற நிறுவனங்களிடமிருந்து விருப்பத்தை வெளிப்படுத்துமாறு அழைப்பு விடுக்கப்படுகின்றது.

| இல | மாவட்டம் | உதவி அரசாங்க அதிபர் பிரிவு | கிராமம் |
|---|---|---|---|
| 1 | முல்லைத்தீவு | கரைதுறைப்பற்று | கேப்பாபிலவு |
| 2 | முல்லைத்தீவு | மாந்தை கிழக்கு | பாண்டியன்குளம் |
| 3 | முல்லைத்தீவு | துணுக்காய் | திருநகர் |
| 4 | முல்லைத்தீவு | புதுக்குடியிருப்பு | நெத்தலியாறு |
| 5 | முல்லைத்தீவு | ஒட்டுசுட்டான் | பனிக்கன்குளம். |

ஆர்வமுடைய அரசசார்பற்ற நிறுவனங்கள் இதுபற்றி மேலதிக விபரங்களை வேலைநாட்களில் காலை 9.30மணி தொடக்கம் மாலை 3.30வரை முல்லைத்தீவு மாவட்ட செயலாளர்/அரசாங்க அதிபரிடமிருந்து (தொலைபேசி:- 024-2222402, தொலைநகல்:-024-2220592) பெற்றுக்கொள்ளலாம்.

இத்திட்டத்தை அமுல் நடத்த விரும்பும் தகுதிவாய்ந்த அரச சார்பற்ற நிறுவனங்கள் தங்களுடைய விருப்பத்தெரிவை முல்லைத்தீவு மாவட்ட செயலாளருக்கு/அரசாங்க அதிபருக்கு 25.05.2004 மாலை 3.00 மணிக்கு முன்பதாகத் தெரிவிக்க வேண்டும். ஒவ்வொரு கிராமத்துக்கும் விருப்பத்தெரிவு வெவ்வேறாகச் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

விருப்பத் தெரிவை அறிவிக்கும் பொழுது பின்வரும் விபரங்களை அது உள்ளடக்கியதாக இருக்க வேண்டும்.

01. விண்ணப்பிக்கும் நிறுவனம் பற்றிய விபரங்கள், நிறுவனத்தின் நோக்கம், முகவரி, தொலைபேசி இலக்கம், சட்டரீதியான பதிவுசெய்த விபரங்கள், ஆளணிகள், நிறுவன ஒழுங்கமைப்பு, கிளைக்காரியாலயம் முதலியன.

02. தொழில்சார் அனுபவமுடைய நிபுணர்களின் எண்ணிக்கையும், நிபுணத்துவம் பெற்ற துறையும்.

03. வடக்கு கிழக்கு மாகாணத்தில் புனரமைப்பு சமூக மீளமைப்பு வேலைகளில் உள்ள அனுபவம்.

04. விசேடமாக வடக்கு கிழக்கில் சமூக ஒருங்கிணைத்தல், சமூக பொருளாதார அபிவிருத்தி நடவடிக்கைகள், சிறு குழுக்களை உருவாக்கல், சிறிய கடன் நடவடிக்கைகளை உருவாக்குதல் ஆகியவற்றில் உள்ள அனுபவம்.

05. வடக்கு கிழக்கில் தற்போது தாங்கள் நடைமுறைப்படுத்தும் வேலைத்தொகையும், கடந்த 05 வருடங்களாக நடைமுறைப்படுத்திய வேலைத்திட்டங்களின் விபரங்களையும்.

06. இக்குறிப்பிட்ட துறையில் சாதித்த குறிப்பிடத்தக்க சாதனைகள்.

07. அத்திட்டத்திற்கான அரச சார்பற்ற நிறுவனத்தின் பங்களிப்பு.

08. விருப்பத் தெரிவிற்கான வேறு ஏதாவது தகவல்கள்.

எல்லா ஆவணங்களும் விண்ணப்பமும் அந்தரங்கமாகப் பேணிக்காக்கப்படும் என்பதனையும் அவைகள் திருப்பி அனுப்பப்படமாட்டாது என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

திருமதி.இமெல்டா சுகுமார்,
மாவட்டச் செயலாளர், அரசாங்க அதிபர்
முல்லைத்தீவு மாவட்டம்.

(அ.9463)

# லஞ்ச ஊழல் ஆணைக்குழுவிற்குப் பதிலாக சனாதிபதியின் கீழ் புதிய குழு அமைக்க ஆலோசனை

(கொழும்பு)

லஞ்ச ஊழல் ஆணைக்குழுவுக்குப் பதிலாக சனாதிபதிக்கு கீழ் இயங்கும் லஞ்ச ஊழல் குழுவொன்றை அமைப்பதற்கு ஆலோசித்திருப்பதாக சனாதிபதி சந்திரிகா தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் அமைச்சுக்களின் செயலாளர்களைச் சந்தித்துக் கலந்துரையாடியபோதே மேற்கண்டவாறு சனாதிபதி தெரிவித்துள்ளார்.

மேற்படி லஞ்ச ஊழல் முறை சிங்கப்பூரில் நடைமுறையில் இருப்பதாகவும் அதன் அடிப்படையில் ஓர் குழுவை அமைப்பதற்கு சனாதிபதி முடிவெடுத்திருப்பதாகவும் சனாதிபதி தெரிவித்துள்ளார்.

இதன்மூலம் முன்னைய அரசாங்கத்தில் ஏற்பட்டுள்ள லஞ்ச ஊழல், தற்போதைய அரசில் ஏற்படும் ஊழல் போன்றவற்றிற்கு உரிய விசாரணை நடத்தமுடியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஆணைக்குழுவின் கீழ் இச் செயற்பாடு இடம்பெறின் அந்த விசாரணை நடவடிக்கையில் சனாதிபதி உள்ளிட்ட அரசியல்வாதிகள் தலையீடு செய்து செல்வாக்குச் செலுத்துவதற்குப் பல வரையறைகள் கட்டுப்பாடுகள் இருக்கும். ஆனால் சனாதிபதியின் கீழான குழுவாக இருப்பின் அதன் விசாரணை நடவடிக்கையில் சனாதிபதியின் விருப்பு வெறுப்புக்கள் செல்வாக்குச் செலுத்த முடியும். இதனால் லஞ்ச ஊழல்களுக்கெதிரான நடவடிக்கையை சனாதிபதி தனது விருப்பு வெறுப்புக்கேற்ப வழிநடத்த முற்பட்டுள்ளதையே சனாதிபதியின் இந்த யோசனை காட்டுவதாக ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

# கடந்த ஆண்டு உயர் கல்விக்காக ஒதுக்கப்பட்ட நிதி வீணடிப்பு

## பிரதி அமைச்சர் தினேஸ்குணவர்த்தன

(கொழும்பு)

கடந்த காலங்களில் கல்விக்காகவும்,உயர் கல்விக்காகவும் ஒதுக்கப்பட்ட நிதி பெருமளவில் வீணடிக்கப்பட்டதாக கல்வித்துறை பிரதியமைச்சர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

உயர் கல்வி அமைச்சில் தனது கடமைகளை பொறுப்பேற்ற பின்னர் அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். தொடர்ந்து அவர் கருத்து தெரிவிக்கையில் எதிர்கால கல்விச் சமூகத்திற்கு கல்வியை உரிய முறையில் புகட்டுவதே புதிய அரசின் நோக்கமாகும். இதற்கான நிதி ஒதுக்கீடுகளை அதிகரிப்பதற்கு சனாதிபதி முடிவெடுத்துள்ளார் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். அத்துடன் கல்வி மேம் பாட்டுத்திட்டங்களை துரிதமாக அமுல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் தெரிவித்துள்ளார்.

# வன்னேரிக்குளம் வேலைத்திட்டம் பூர்த்தி செய்யப்பட்டு ஒப்படைப்பு

(அலுவலகசெய்தியாளர்)

வன்னேரிக்குளத்தில் வடக்கு-கிழக்கு நீர்பாசனத்திட்டத்தின் கீழ் 2002ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட வேலைத் திட்டங்கள் இவ்வாண்டு பூரணமாக முடிக்கப்பட்டு அக்கிராமத்திடம் ஒப்படைக்கப்பட்டது.

இக்கிராமத்தில் மேற்கொள்ளப்பட்ட உபதிட்டங்களில் குளத்தினை கமக்கார அமைப்பிடமும் வீதியினையும்,பொதுக்கிணற்றினையும், கிராம அபிவிருத்திச் சங்கத்திடமும் மற்றும் பொது மண்டபத்தினையும், ஜீவனோபாய ஆதார செயற்பாட்டு கடன்திட்டத்தினையும் அந்தக் கிராமத்து மாதர்கிராமிய அபிவிருத்திச் சங்கத்திடமும் ஒப்படைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட அரசாங்கஅதிபர் இராசநாயகம் அவர்கள் பிரதம விருந்தினராக கலந்து கொண்டார். அத்தோடு நியாப்பிரதித் திட்டப் பணிப்பாளர் மற்றும் நியாப்திட்டத்தோடு தொடர்புபட்ட சகல திணைக்களம் சார்ந்த அதிகாரிகளும், அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளும், கலந்து கொண்டனர்.

மேற்படி நிகழ்வு நேற்றையதினம் நண்பகல் 12 மணியளவில் வன்னேரிக்குளத்தில் புதிதாக அமைக்கப்பட்ட பொதுமண்டபத்தில் கமக்கார அமைப்புத்தலைவர் தலைமையில் இடம் பெற்றது. (கு.தீ)

# உழவு இயந்திர கடன் திட்டத்தின் கீழ் ஆறு பயனாளிகளுக்கு உழவு இயந்திரம்

## த.பொ.மே.நிறுவனம் வழங்கியது

தமிழீழ பொருண்மியமேம்பாட்டு நிறுவனத்தின் விவசாயப் பகுதியினால் ஏற்பாடு செய்யப்பட்ட உழவு இயந்திரம் கடன் திட்டத்தின் மூலம் ஆறு பயனாளிகளுக்கு உழவு இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

சி.இலங்கேஸ்வரன் -கோரக்கன்கட்டு,கோ.தவராசா-இராமநாதபுரம், கு.கணேசலிங்கம்-இராமநாதபுரம்,இ.ஜெயரத்தினம்-தருமபுரம்,ஆ.நவரட்ணம்-கல்மடுநகர், ஆ.முருகையா-தருமபுரம் மேற்படி பயனாளிகளுக்கு கிளிநொச்சி மாவட்ட தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன செயலகத்தில் நேற்று பிபகல் 3.30 மணிக்கு வழங்கப்பட்டன.



இந் நிகழ்வில் தமிழீழ பொருண்மியமேம்பாட்டு நிறுவனத்துணைப் பொறுப்பாளர் திரு.க.மதன்ராஜ், உட்கட்டுமானப் பகுதிப் பொறுப்பாளர் சி.குகன், தமிழீழப் பொருண்மிய மேம்பாட்டு நிறுவன கிளிநொச்சிமாவட்டப் பொறுப்பாளர் திரு.மு.செந்தில், மாவட்ட இணைப்பாளர் ச.வினாய மூர்த்தி ஆகியோர் கலந்து கொண்டனர்

# வெள்ளப் பெருக்கால் பாதிக்கப்பட்டோருக்கு முதலாம் கட்ட கொடுப்பனவு 6ஆம் திகதி

(கண்டாவளை)

கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவில் கடந்த 2003 டிசம்பர் மாதம் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கு காரணமாக பாதிக்கப்பட்ட கிராம சேவகர்களூடாக தெரிவு செய்யப்பட்ட 17 குடும்பங்களுக்கு முதலாம் கட்டக்கொடுப்பனவு எதிர்வரும் ஆறாம் திகதி பி.ப 2.00 மணிக்கு கண்டாவளை பிரதேச செயலகத்தில் வழங்கப்படுமென பிரதேச சமூக சேவை உத்தியோகத்தர் திரு.ந. தசரதராஜ குமாரன் அறிவித்துள்ளார்.

மேலும் அன்றைய தினம் அனைவரையும் தவறாது வந்து பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுள்ளார் (14)

# "றேபீஸ்" வக்சீன்தடுப்பூசி போடும் இடங்கள்

(உடையார் கட்டு)

விசர் நாய்க்கடி நோய் (றேபீஸ்) ஏற்படுவதைத் தடுக்கும் நோக்குடன் தமிழீழ சுகாதார சேவைகள் பகுதியினரும், சுகாதாரத் திணைக்களமும் இணைந்து இன்று றேபீஸ் வக்சீன் தடுப்பு ஊசியை நாய்களுக்கு பின்வரும் பகுதிகளில் வைத்து ஏற்றவுள்ளனர். அதற்கான பகுதிகளும் நேரமும் பின்வருமாறு அமையும்.

விசுவமடு - விசுவமடு விவசாயிகள் ப.நோ.கூ. சங்கத் தலைமையகம் முன்பாக காலை 9.00-11.00 மணிவரையும் வள்ளுவர்புரம் ஆரம்ப சுகாதார நிலையம் 11-15 மணி முதல் - 1.30 வரையும் உடையார் கட்டு- உடையார்கட்டு கிளை வைத்திய சாலை முன்பாக மதியத்தைத் தொடர்ந்து 2.00-3.00 மணிவரையும் இடம் பெறும் எனவும் தமிழீழ சுகாதார சேவைகள் (முல்லை மாவட்டம்) பகுதியினர் அறிவிக்கின்றனர்.

எனவே மக்கள் நாய்களை கொண்டு வந்து இச் சந்தர்ப்பத்தை தவறாது பயன்படுத்த வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். ஏனெனில் றேபீஸ் வக்சீன் ஒரு விலையுயர்ந்த தடுப்பு ஊசி மருந்தாகும். (19)

# பொதுசன மாதாந்த உதவிப்பணக் கொடுப்பனவு

(அலுவலக செய்தியாளர்)

கிளி.மாவட்டத்தில் பொதுசன மாதாந்த உதவிப் பணம், மற்றும் காசநோய், புற்றுநோய் உதவிக் கொடுப்பனவுகள் தற்போது பிரதம மற்றும் உபதபால் அலுவலகங்கள் ஊடாக வழங்கப் பெற்றுவருகின்றது.

மேற்படி கொடுப்பனவுகளைப் பெறுபவர்கள் அந்தந்தப் பகுதி உப தபாலகங்களில் எதிர்வரும் "மே மாதம்" 8ஆம் திகதி வரை பெற்றுக் கொள்ளலாம் என கிளிநொச்சி பிரதம தபாலதியர் தெரிவித்துள்ளார். (சோ)

# விசேட செயலமர்வு

(மன்னார்)

மனித உரிமை ஆணைக்குழுவின் ஆதரவில் மன்னார் பிராந்திய அலுவலகம் இடம்பெயர்ந்தோருக்கான விசேட செயலமர்வு பயிற்சிப் பட்டறை ஒன்று நேற்று முன்தினம் நடைபெற்றது.

மன்னார் வை.எம்.சி.ஏ. மண்டபத்தில் காலை 10 மணிக்கு ஆரம்பமான இந் நிகழ்வில் ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவில் இருந்தும் தெரிவு செய்யப்பட்ட 80 பேர் கலந்து கொண்டனர்.

விசேட பேச்சாளராக கொழும்பு மனித உரிமைகள் ஆணைக்குழுவின் திட்ட அதிகாரியும் இணைப்பாளருமான சேனாதீர திஸ்ஸநாயக்க கலந்து கொண்டு சிறப்புரை யாற்றினார். (மி)

# விவசாயிகளுக்கு பயிற்சி

(புதுக்குடியிருப்பு)

புதுக்குடியிருப்பு விவசாயிகளுக்கான பயிற்சி வகுப்பு கடந்த செவ்வாய்க்கிழமை கமநலசேவை அலுவலகத்தில் கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் தலைமையில் நடைபெற்றது.

பயிற்சி வகுப்பில் தென்னைச் செய்கை, கமக்காரர் வங்கி, கால் நடைக்களுக்கான நோய்கள், விவசாயிகள் ஓய்வூதியத்திட்டம், ஆகிய விடயங்களை முறையே துறை சார்ந்த ரவீந்திரன், தர்மலிங்கம்,ஜெயராஞ்சன், மாதவராசா ஆகியோர் வழங்கினர்.

இந் நிகழ்வில் புதுக்குடியிருப்புக்கு புதிதாக நியமனம் பெற்ற கால்நடை வைத்தியர் செல்வி. சுகந்தி அவர்களின் அறிமுகத்துடன் பயிற்சியாளர்களுக்கு சான்றிதழ்களும் வழங்கப்பட்டது.

# சமகால நிலை தொடர்பாக மன்னாரில் கருத்தரங்கு

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் மன்னார் மாவட்ட அரசியல்துறையினரால் சமகால நிகழ்வு பற்றியும் எதிர்வரும் மே.தின நிகழ்வு தொடர்பாகவும் கருத்தரங்கொன்று நேற்று முன்தினம் நடைபெற்றுள்ளது.

மன்னார் பிரதேச செயலகத்தில் நடைபெற்ற மேற்படி கலந்துரையாடலுக்கு மன்னார் நகர பிரதேச செயலர் வரதீஸ்வரன் தலைமை தாங்கினார். இதில் மன்னார் மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இனியவன். அரசியல் துறையைச் சேர்ந்த மூர்த்தி, மன்னார் மாவட்ட பிரதேச செயலர்கள் கலந்துகொண்டனர்.

இதன்போது மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் இனியவன் சிறப்புரையாற்றினார். (மி)

# க.பொ.த.(உ/த)பரீட்சை முல்லை மாவட்டத்தில் 1416 பரீட்சார்த்திகள்

(புதுக்குடியிருப்பு)

க.பொ.த.. உயர்தரப் பரீட்சை 06.05.2004 அன்று ஆரம்பமாகின்றது.

இம்முறை முல்லை மாவட்டத்தில் பதின்மூன்று பரீட்சை நிலையங்களில் பரீட்சை நடைபெறவுள்ளது.இதற்கு இணைப்பு நிலையங்களாக ஏழு (7)நிலையங்கள் செயற்படவுள்ளன.

இம்முறை முல்லை மாவட்டத்தில் 1416 பரீட்சார்த்திகள் தோற்றவுள்ளனர். பாடசாலைகள் மூலமாக 995 பரீட்சார்த்திகளும் 421 தனிப்பட்ட பரீட்சார்த்திகளும் தோற்றவுள்ளதாக கல்விப் பணிமனையினர் மேலும் தெரிவித்துள்ளனர். (08)

# மூன்று தூதரகங்கள் மீது டமாஸ்கஸில் தாக்குதல்

## நால்வர் பலி

(லண்டன்)

டமாஸ்கஸ்ஸில் கடந்த செவ்வாய்க் கிழமை மூன்று வெளிநாட்டுத்தூதரகங்கள் மீது தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் நால்வர் உயிரிழந்துள்ளனர்.

ஈரான்,கனடா, ஐக்கியஇராச்சியம் ஆகிய நாடுகளின் வெளிநாட்டுத் தூதரகங்கள் மீதே தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

முகமூடி அணிந்த ஆயுததாரிகளே இத் தாக்குதலை மேற்கொண்டுள்ளனர். இவர்கள் மீது பொலிசார் திருப்பிச் சுட்டதில் முகமூடியணிந்தவர்களில் இரண்டு பேரும் பொலிசார் ஒருவரும்,சிவிலியன், ஒருவரும் உயிரிழந்துள்ளனர். இத்தாக்குதலினால் தமது தூதரகங்களுக்கு எவ்வித சேதங்களும் ஏற்படவில்லையென கனடா மற்றும் பிரிட்டிஷ் தூதரக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# இடம் பெயர்ந்த மக்களின் வாழ்க்கையை புதுப்பிக்கும் முயற்சியில் ஈடுபடுக

## -அரசு, புலிகளிடம் ஐ.நா. அதிகாரி கோரிக்கை

(கொழும்பு)

இடம் பெயர்ந்துள்ள ஆயிரக்கணக்கான மக்களின் வாழ்க்கையை புதுப்பிக்கும் முயற்சிகளில் ஈடுபடவேண்டுமென அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் சபை இலங்கை அரசாங்கத்திடமும் தமிழீழ விடுதலைப்புலிகளிடமும் கோரியுள்ளது.

சபையின் கண்காணிப்பாளரான டென்னிஸ் மெக்மாரா தமது இரு வாரகால இலங்கை விஜயத்தை முடித்துக் கொண்ட பின்னர் ஊடக மாநாடொன்றை நேற்று கொழும்பில் நடத்தினார். மக்களின் இஸ்திர தன்மையில்லாமல் ஒருகாலமும் சமாதானத்தை ஏற்படுத்த முடியாது இதுசம்பந்தமாக பலதிட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளபோதும் மேலும் பல முன்னெடுப்புக்கள் மேற்கொள்ளப் படவேண்டியுள்ளன நீண்டகாலமாகத் தொடரும் இந்த மனிதாபிமான பிரச்சினைக்குத் தீர்வைக்காண புதிய ஏற்பாடுகள் செய்யப்படவேண்டும். இந்த நிலையில் இலங்கையில் அனைத்துத் தரப்புகளும் நன்மைபெறும்போது மாத்திரமே சமாதான நல்வாழ்வு ஏற்படவாய்ப்பு உள்ளதாகவும் மெக்மாரா தெரிவித்தார்.

அகதிகளுக்கான ஐக்கியநாடுகள் சபையின் மதிப்பீட்டின்படி போர் நிறுத்த உடன்பாட்டின் பின்னர் 360 ஆயிரம் மக்கள் தமது வீடுகளுக்குத் திரும்பியுள்ளனர். ஏற்கனவே சுமார் 370 ஆயிரம் மக்கள் வீடுகள் இன்றியும் 140ஆயிரம் பேர் அகதிகளாக வெளிநாடுகளிலும் வாழ்ந்து வருகின்றனர். கடந்த பெப்ரவரி மாதத்தில் மாத்திரம் சுமார் 2ஆயிரத்து 543 பேர் தமது இடங்களுக்கு திரும்பினர். இதுவே போர்நிறுத்தத்தின் பின்னர் ஆகக் குறைந்த தொகையினர் வீடுகளுக்குத் திரும்பிய சந்தர்ப்பமாகும் எனக்கூறிய மெக்மாரா மீளத் திரும்பும் அகதிகளுக்கு இடப்பிரச்சினை பாரிய தடைகளாக இருக்கிறது. மீளத்திரும்பும் மக்கள் தமது இருப்பிட உரிமைகள் தொடர்பாகவும் பிரச்சினைகளை எதிர் கொள்கின்றனர். இவ்வாறான சூழ்நிலையில் மனிதாபிமானம் அரசியலுக்காக பணயம் வைக்கப் படுவதை ஏற்றுக் கொள்ள முடியாது. இடம் பெயர்ந்தவர்களை அதிகமாக கொண்ட நாடாக இலங்கை தொடர்ந்தும் இருந்து வருகின்றது. என்றும் மூன்று இலட்சத்து எழுபதாயிரம் பேர் சொந்தக் குடியிருப்புக்களைக் கொண்டிருக்கவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# -படையினரால் கைவிடப்பட்ட- வெடிபொருள் வெடித்து இருகுடும்பஸ்தர் படுகாயம்

படையினரால் கைவிடப்பட்ட வெடி பொருள் ஒன்று வெடித்துச் சிதறியதில் இரு குடும்பஸ்தர்கள் படுகாயமடைந்துள்ளனர்.

நேற்று அரியாலைப் பகுதியில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்தவர்களான எம்.யோகராஜா(வயது-54) மற்றும் த. கிருஸ்ணமூர்த்தி (வயது50) ஆகிய இருவருமே படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்திய சாலையின் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மேற்படிச் சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது, அரியாலைப் பகுதியில் படையினர் பாதுகாப்பு வலயமாக வைத்திருந்த பகுதியில் சில இடங்களை மக்களின் மீள் குடியமர்வுக்காக அண்மையில் மக்களிடம் கையளித்திருந்தனர்.

இவ்வாறு வெடிபொருள் அபாயம் அற்றது எனக் கூறி மக்களிடம் கையளிக்கப்பட்டிருந்த பகுதி ஒன்றிலிருக்கும் தமது காணியை துப்புரவு செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தபோதே இவ் வெடிவிபத்து இடம் பெற்றுள்ளது.

### கண்காணிப்புக்...

விரிவாக ஆராயப்பட்டன.

இதில் அண்மைக் காலமாக பாதுகாப்பு நடவடிக்கைகள் என்ற பெயரில் மக்களின் இயல்பு வாழ்வுக்கு இடையூறாக படையினரால் மேற்கொள்ளப்பட்டுவரும் அத்துமீறல்களும், அடாவடித்தனங்களும் நிறுத்தப்பட வேண்டும் எனவும் தமிழ் தேசவிரோதிகளான ஈ.பி.டி.பி.யினருக்கு ஆதரவாகப் படையினர் செயற்படுவது தவிர்க்கப்படல் வேண்டும் எனவும் புலிகள் தரப்பினர் கோரியுள்ளனர். (33)

### அரசின்...

மூன்று நாட்களில் நோர்வே பிரதிநிதிகள் தமது அதிகாரபூர்வ விஜயத்தை மேற்கொள்ள உள்ளனர். அவர்கள் அப்போது அரசாங்கதின் நிலைப்பாட்டை நேரடியாக அறிந்து வந்து எம்மிடம் முன்வைப்பார்கள். அதன் பின்னர்தான் எங்களுடைய நிலைப்பாடுகளை நாங்கள் முன்வைப்போம்.

கேள்வி:- ஐக்கிய தேசியக்கட்சி அரசு ஆட்சியில் இருந்தபோது மேற கொண்ட சமாதான முன்னெடுப்புக்களுக்கு எதிரான கருத்துக்களைச் சந்திரிகா அரசு மேற் கொண்டுவந்தது. இப்போது அவர் உங்களுடன் இதயசுத்தியாகப் பேச்சு நடத்துவார் என நீங்கள் கருதுகிறீர்களா?

பதில் :- இதயசுத்தியுடனும் நேர்மையுடையதாகவும் பேச்சு நடக்கும் என்ற எதிர்பார்ப்புக்களை விட இனி நடக்கப் போகின்ற காரியங்களை வைத்துக்கொண்டு முடிவுகளை எடுப்பது தான் பொருத்தமாக இருக்கும் என்று நினைக்கின்றேன். நீங்கள் குறிப்பிட்டது போல நிச்சயமாக சமாதான முயற்சிக்கு எதிரான விமர்சனங்களைப் பலர் செய்திருக்கிறார்கள். ஆனால் இந்த புதிய சூழலில் மக்கள் வழங்கிய ஆணையின் அடிப்படையில் எப்படி இனிச்செயற்பட போகிறார்கள் என்ற அடிப்படையயை வைத்துக்கொண்டுதான் நாம் எமது நிலைப்பாடுகளை எடுப்பது பொருத்தமாக இருக்கும். நாங்கள் இப்பொழுதே அதைப்பற்றிய எதிர்வு கூறல்களை வெளிப்படுத்துவது சமாதான சூழலுக்குப் பாதிப்புக்களை ஏற்படுத்தும் என்ற காரணத்தால் இப்பொழுது அதைப் பற்றிக் கூறுவது பொருத்தமில்லை என்றுதான் நினைக்கின்றேன் எனத் தெரிவித்தார்.

# பாரபட்ச சிந்தனை கொண்ட அரசிற்கு தமிழரை ஆளும் உரிமை கிடையாது

## -தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன்

(கொழும்பு)

வடக்கு-கிழக்கில் இடம்பெயர்ந்திருக்கும் பல இலட்சக்கணக்காண தமிழ் மக்களை மீளக்குடியமர்த்துவதற்கு வேண்டிய உதவிகளை வழங்கத் தவறியிருக்கும் சிறிலங்கா அரசாங்கத்திற்கு தமிழ் மக்களை ஆளும் தார்மீக உரிமை கிடையாது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

போர் அனர்த்தங்களினால் தமது வதிவிடங்களைவிட்டு இடம் பெயர்ந்திருக்கும் [illegible]ம் எண்ணிக்கையிலான மக்கள் அகதிமுகாம்களிலும் சமூகநல நிலையங்களிலும் இன்னமும் அவல வாழ்க்கையைத் தொடரும் நிலை நீடிக்கின்றது என்று கிண்ணியாவில் நடைபெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றுகையில் கூறினார்.

இடம்பெயர்ந்த மக்களுக்கு சிறிலங்கா அரசாங்கம் எந்த உதவிகளையும் வழங்கவில்லை. தமிழ் மக்களின் நலன்களில் தென்னிலங்கை அரசாங்கத்திற்கு அக்கறையில்லை என்பதையே இது எடுத்துக்காட்டுகின்றது. இவ்வாறான பாரபட்ச சிந்தனை கொண்ட அரசாங்களுக்கு தமிழ் மக்களை ஆட்சிபுரியும் அருகதையும் கிடையாது என்றும் அவர் கூறினார்.

### சமாதான...

இந்தியாவின் புதுடில்லிக்குச்சென்ற லக்ஷ்மன் கதிர்காமர் அங்கு இந்தியாவின் வெளிவிவகார அமைச்சர் ஜஸ்வன்சிங்கா உட்பட இந்தியாவின் உயரதிகாரிகள் பலரையும் சந்தித்து உரையாடியுள்ளார்.

இதேவேளை இந்தியாவின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவிக்கையில் இந்தியாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் ராஜேஸ் மிஸ்ராவையும் அமைச்சர் கதிர்காமர் சந்தித்துள்ளதாகத் தெரிவித்தார்.

லக்ஷ்மன் கதிர்காமர் மேலும் தெரிவிக்கையில் வரும் ஜூன்மாத இறுதியளவில் சமாதானப் பேச்சு வார்த்தைகளை மீண்டும் ஆரம்பிக்க முடியும் எனத் தெரிவித்துள்ளார்.

### 15தமிழர் கைது

(கொழும்பு)

தெகிவளையில் ஆண் பெண் இருபாலருமாக 15 தமிழர்களை சந்தேகத்தின் அடிப்படையில் நேற்று பொலிசார் கைதுசெய்துள்ளனர். விசாரணை நடத்திய பின்னர் 06 பேரை பொலிசார் விடுவித்துள்ளதுடன் ஏனையோர் பொலிசில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் (32)

### மட்டு...

முக்கியமாக அரசு மாறிய நிலையில் புதிய சூழல் உருவாகியிருக்கின்றது. இந்த நிலையில் யுத்தநிறுத்த உடன்படிக்கையை நடைமுறைப்படுத்துவது சம்பந்தமாகவும், இதில் அரசு கொண்டிருக்கும் நிலைப்பாடு பற்றியும் அவரிடம் நாம் தெளிவாகக் கேட்டறிந்தோம். அத்துடன் அண்மைக்காலத்தில் நடைபெற்ற சிலசம்பவங்கள் சம்பந்தமாக எமது தலைமைப்பீடத்தின் கரிசனைகளை நாம் முன்வைத்திருக்கின்றோம்.

கேள்வி:- மட்டக்களப்பில் நடைபெற்ற படுகொலைகள் குறித்து கண்காணிப்புக்குழு என்ன நிலைப்பாட்டைக் கொண்டிருக்கின்றது?

பதில்:- மட்டக்களப்பில் நடைபெற்ற பிரச்சினை சம்பந்தமாக நாம் எமது நிலைப்பாட்டை இவர்களிடம் முன்வைத்திருக்கின்றோம். இதில் முக்கியமாக எமது தலைவரின் கரிசனையையும் எமது நிலைப்பாட்டையும் அதிருப்தியையும் தெரிவித்திருக்கிறோம். இந்தச் சம்பவம் மட்டக்களப்பு இராணுவக்கட்டுப் பாட்டுப் பிரதேசத்தில் இருந்து வந்துதான் நடத்தப்பட்டுள்ளது. ஆகவே படைத்தரப்பின் ஆதரவின்றியோ அல்லது அவர்களுக்குத் தெரியாமலோ இந்தச் சம்பவம் நடைபெறுவதற்கான சாத்தியப்பாடுகள் எதுவுமில்லை. ஆகவே இது ஒருயுத்த நிறுத்த மீறலாக எமது தலைமைப்பீடத்தினுடைய விசனத்தை நாங்கள் அவர்களுக்கு எடுத்துக்கூறியிருக்கின்றோம் எனவே இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணையை நடத்தி இதுதொடர்பான விளக்கத்தை விரைவில் வெளிப்படுத்த வேண்டும். இத்தகைய சம்பவங்கள் அமைதிச் சூழலை செம்மையாக நடைமுறைப்படுத்துவதற்கு சாத்தியமான சூழலை குழப்புமென்றே அவர்களிடம் வலியுறுத்திக் கூறியிருக்கின்றோம்.

கேள்வி:- இந்தச் சம்பவம் தொடர்பாக கண்காணிப்புக் குழுவிடம் நீங்கள் முன்வைத்த கருத்துக்களை அவர்கள் முற்றாக ஏற்றுக்கொண்டிருக்கிறார்களா?

பதில்:- நிச்சயமாக அவர்கள் இந்தச் சம்பவம் ஒரு யுத்த நிறுத்த மீறல்என்பதையும் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். அதுமட்டுமன்றி தாம் இது தொடர்பான தீவிரவிசாரணையை மேற்கொண்டிருக்கிறோம் என்றும் தெரிவித்தனர்.

தான் ஒருயுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழுத் தலைவர் என்ற வகையில் எங்களுடைய தேசியத் தலைவரிடம் தங்களுடைய தீவிர செயற்பாடுபற்றித் தெரிவிக்கும் படியும் கூறியிருக்கிறார்கள். அந்த வகையில் அவர்கள் இதில் தீவிர கரிசனைகொண்டு தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றார்கள் என்பதை தெளிவுபடுத்தியிருக்கின்றார்கள்.

கேள்வி:- அரசபடைகள் இந்தச் சம்பவத்துடன் தொடர்பு பட்டிருப்பதால் நீங்கள் அரசுக்கு நேரடியாக உங்களது ஆட்சேபத்தை தெரிவித்திருக்கிறீர்களா?

பதில்:- நாம் எமது ஆட்சேபத்தை கண்காணிப்புக் குழு ஊடாக தெரிவித்திருக்கிறோம். இத்தகைய சம்பவங்கள் முழுஅளவிலான யுத்த நிறுத்த மீறல் என்பதையும் யுத்த நிறுத்த உடன் பாட்டை செம்மையாக நடைமுறைப்படுத்துவதை அல்லது இந்த அமைதிச் சூழலை தொடர்ந்து பேணுவதில் பாரிய நெருக்கடியையும் குழப்பத்தையும் நிச்சயமாக ஏற்படுத்தும் என்ற எங்களது தலைமைப் பீடத்தின் நிலைப்பாட்டை இவர்கள் ஊடாக அவர்களுக்கும் தெரியப் படுத்தும் படி கூறியிருந்தோம்.

நேற்றுக் காலை 10.15 மணிக்கு உலங்கு வானூர்தி மூலம் கிளி மத்திய விளையாட்டு மைதானத்தை வந்தடைந்த யுத்தநிறுத்த கண்காணிப்புக்குழுத் தலைவர் டொன் புறூவ்கொவ்டே குழுவினரை தமிழீழ துணைஅரசியல் பொறுப்பாளர் சோ.தங்கன் சமாதான செயலகத்தைச் சேர்ந்த புலாநந்தன் ஆகியோர் வரவேற்றனர் தொடர்ந்து 10.30 மணியளவில் விடுதலைப் புலிகளின் சமாதான செயலகத்தில் கண்காணிப்புக் குழுவினருக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான சந்திப்பு ஆரம்பமானது.

இச்சந்திப்பில் தமிழீழ விடுதலைப்புலிகள் சார்பாக தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் சமாதான செயலகத்தைச் சேர்ந்த பவாநந்தன் ஜோஜ் ஆகியோர் கலந்து கொண்டனர் கண்காணிப்புக் குழு தரப்பில் கண்காணிப்புக் குழுத் தலைவர் டொன்புறூவ் கொவ்டே அடங்கிய குழுவினர் கலந்து கொண்டனர் காலை 10.30 மணிக்கு ஆரம்பமான இச் சந்திப்பு முற்பகல் 1130 வரை நீடித்தது. (லோ.கு)


கிளிநொச்சி மருத்துவ சங்கம்

கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலை சுத்திகரிப்பு பணியாளர்கள் விண்ணப்பம் கோரல்

ஜப்பான் அரசின் உதவியுடன் பல மில்லியன் ரூபா செலவில் நவீன முறையில் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ள கிளி. மாவட்ட வைத்தியசாலை நோயாளர்கள் விடுதிகளை கிளிநொச்சி மருத்துவ சங்கத்தின் ஒழுங்கமைப்பில் கிளிநொச்சி தனியார் வர்த்தக நிறுவனங்கள், வங்கிகளின் நிதி உதவிகளுடன் பராமரிக்கவுள்ளோம். இப்பணிக்கு சுத்திகரிப்பு பணியாளர்கள் தேவைப்படுகின்றனர்.

சுத்திகரிப்பு பணியாளர் :-ஆண், பெண் இருபாலாரும்

வயதெல்லை :- 18 - 45 வயது வரை

தகைமைகள் :-

பொது நோக்குடைய, சமூக சேவையில் ஆர்வமுள்ள, எந்தப் பணியையும் இதயசுத்தியுடன் நேர்மையாக சலிப்பின்றிச் செய்யும் ஆற்றலுடையோர்.

சம்பள விபரம்:-

* அடிப்படைச்சம்பளம் 4,000.00 மாதாந்தம்.
* அத்துடன் மேலதிக நேரவேலைக் கொடுப்பனவுகள்
* ஏனைய சலுகைகளும் வழங்கப்படும்.

நேர்முகத் தேர்வு :-

எதிர்வரும் 05.05.2004 காலை 10.00 மணிக்கு மாவட்டவைத்தியசாலைக்கு நேரடியாக வருகைதரவும்.

மருத்துவ சங்கம்,
கிளிநொச்சி.

விளம்பர அனுசரணை

செந்தென்றல் ஓய்வகம்

புகையிரத நிலைய வீதி,
கிளிநொச்சி.

(சி.9.395)


இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 30 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது.